## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## முதல் பத்து

### இரண்டாம் திருவாய்மொழி - வீடுமின்
### ’பகவத் பக்தியைப் பண்ணி ஆஸ்ரயியுங்கோள்’ என்று பிறர்க்கு உபதேசித்தல்

** வீடுமின் முற்றவும் *
வீடு செய்து ** உம் உயிர்
வீடு உடையான் இடை *
வீடு செய்ம்மினே 1

மின்னின் நிலையில *
மன்னுயிர் ஆக்கைகள் **
என்னும் இடத்து * இறை
உன்னுமின் நீரே 2

நீர் நுமது என்றிவை *
வேர் முதல் மாய்த்து ** இறை
சேர்மின் உயிர்க்கு * அதன்
நேர் நிறை இல்லே 3

இல்லதும் உள்ளதும் *
அல்லது அவன் உரு **
எல்லையில் அந்நலம் *
புல்கு பற்று அற்றே 4

அற்றது பற்று எனில் *
உற்றது வீடுயிர் **
செற்றது மன்னுறில் *
அற்றிறை பற்றே 5

பற்றிலன் ஈசனும் *
முற்றவும் நின்றனன் **
பற்றிலையாய் * அவன்
முற்றில் அடங்கே 6

அடங்கெழில் சம்பத்து *
அடங்கக் கண்டு ** ஈசன்
அடங்கெழில் அஃது என்று *
அடங்குக உள்ளே 7

உள்ளம் உரை செயல் *
உள்ள இம்மூன்றையும் **
உள்ளிக் கெடுத்து * இறை
உள்ளில் ஒடுங்கே 8

ஒடுங்க அவண் கண் *
ஒடுங்கலும் எல்லாம் **
விடும் பின்னும் ஆக்கை *
விடும் பொழுது எண்ணே 9

** எண் பெருக்கு அந்நலத்து *
ஒண் பொருள் ஈறில **
வண் புகழ் நாரணன் *
திண் கழல் சேரே 10

** சேர்த் தடத் * தென் குரு
கூர்ச் சடகோபன் சொல் **
சீர்த் தொடை ஆயிரத்து *
ஓர்த்த இப்பத்தே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---